மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர்வர்களே, படித்து வெளியேறியவர் பற்றிய கணக்கு என்னிடமில்லை. ஆனால் இந்தத் திட்டத்தை யாரும் இதுவரை பயன்படுத்தி வந்ததாகத் தெரியவில்லை. பின்னாலே இதுபற்றி மறுபடியும் பரிசீலனை செய்யப்பட்டதில், இந்த ஆயிரம் ரூபாய் ஒரு தனி நபருக்கு, ஐ.டி.ஐ. படித்த மாணவருக்குக் கொடுக்கலாம் என்ற திட்டம் போதவில்லை யென்ற முடிவுக்கு வந்து, இப்போது 5,000 ரூபாய் வரை அந்தக் கடனைத் தரலாம் என்று அரசு முடிவெடுத்திருக்கிறது.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: தலைவரவர்களே, எத்தனை ஆண்டுகள் இந்தப் பரிசோதனை நடந்து இந்தத் திட்டம் செயல்படவில்லையென்ற உண்மையைக் கண்டுபிடிக்க முடிந்தது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே இதை முடிவு செய்தோம். அதற்குப் பின்னாலே 1972-வது வருடம் 7-வது மாதத்திலே இந்த மாதிரி ஒரு திட்டத்திற்கு யார் வேண்டு மானாலும் மனுச் செய்யலாமென்று அறிவித்திருந்தது. அதற்குப் பின்னாலே இதுபற்றிய முடிவை மாற்றிக்கொண்டிருக்கிறோம்.

Recruitment of apprentices through the Employment Exchanges

* 32. *Q*.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government of India have informed the Director of Employment and Training not to compel the recruitment of apprentices through the Employment Exchanges; and

(*b*) if so, the details thereof?

வேலை வாய்ப்பு நிலையங்கள் மூலம் தொழில் பழகுவோரைச் சேர்த்துக்கொள்ளுதல்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தொழில் பழகுவோர் வேலை வாய்ப்பு நிலையங்கள் மூலம் தான் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்று கட்டாயப்படுத்த வேண்டாம் என வேலை வாய்ப்பு-பயிற்சித் துறை இயக்குநருக்கு இந்திய அரசு தெரிவித்துள்ளதா?

(ஆ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

1973 பிப்ரவரி 6]

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ): 1961-ஆம் ஆண்டுத் தொழில் பழகுவோர் சட்டத்தின் விதித் துறைகளை விளக்குகையில், தொழில் பழகுவோர்களை வேலைவாய்ப்பு அலுவலகங்களின் வாயிலாக வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று தொழிலதிபர்களைக் கட்டாயப் படுத்த இயலாதென மட்டுமே 1971-ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் இந்திய அரசு வேலைவாய்ப்புப் பயிற்சித் துறை இயக்குநருக்குச் சுட்டிக்காட்டியுள்ளது.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: தலைவரவர்களே, கட்டாயப்படுத்த வேண்டா மென்று மத்திய அரசு சொன்னதற்கான காரணங்கள் யாவை? இந்த அரசினுடைய கணிப்பிலே அது சரியான யோசனை என்று கருதுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, தொழிற்சாலைகளிலே 'அப்பரன்டிஸ் ஆக்ட்' படி 'அப்பரன்டிஸ்' எடுக்கப்படுகிறார்கள். இந்த 'அப்பரன்டிஸ்'கள் இப்போது எம்பிளாய்மென்ட் எக்ஸ்சேன்ஞ் மூலம் எடுக்கக் கட்டாயப்படுத்த விரும்பவில்லையென்று தான் தெரிகிறது. ஆங்காங்கு உள்ள ஐ.டி.ஐ. நிறுவனத்தை நடத்துகிறவர்கள் அடிக்கடி இந்தத் தொழிற் சாலைகளுக்குச் சென்று பார்த்து, 'கோ ஆர்டினேஷன்' மூலம் இந்த அப்பரன்டிசை ஐ.டி.ஐ. பயிற்சிப் பள்ளியிலிருந்து எடுக்கக்கூடிய ஒரு முயற்சியை நாம் செய்து வருகிறோம்.

Industrial Refinery

*33. *Q.*—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Industries be pleased to state:

(*a*) whether the Tamil Nadu Industrial Development Corporation has applied for the issue of a licence for opening an Industrial Refinery in Tuticorin; and

(*b*) if so, the details thereof?

தொழிற் பொருள்களைத் தூய்மைப்படுத்தும் தொழிற்சாலை

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தூத்துக்குடியில் தொழிற் பொருள்களைத் தூய்மைப்படுத்தும் தொழிற்சாலை (Industrial Refinery) ஒன்றைத் தொடங்குவதற்கு உரிமம் வழங்கும்படி தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் விண்ணப்பித்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?